# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

19- A, Rukmini Lakshmipathy Salai, (Marshal Road),
Egmore, Chennai – 600 008.
Phone : ++91-044-2841 1376 / 2841 1378/ 2841 1379 Fax : ++91-044-2841 1377
Email : tnerc@nic.in Web site : www.tnerc.gov.in


**முன்னிலை: திரு. செ. தேவராஜன், மின்குறைத் தீர்ப்பாளர்**
**மேல்முறையீட்டு மனு எண். 31 /2018**

திரு. J. துரைராஜ்,
த/பெ ஜெகநாதன் நாயுடு,
துளசியாப்பட்டிணம் அஞ்சல்,
வேதாரண்யம் தாலுக்கா,
நாகப்பட்டிணம் மாவட்டம் .... மனுதாரர்
(திரு. V. சீனிவாசன், வழக்கறிஞர்)

எதிர்

1) உதவி பொறியாளர்/வாய்மேடு,
நாகபட்டிணம் மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
பட்டுக்கோட்டை மெயின் ரோடு,
வாய்மேடு – 614 714.

2) உதவி செயற்பொறியாளர்/வேதாரண்யம்,
நாகபட்டிணம் மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
திருத்துறைபூண்டி மெயின் ரோடு,
வேதாரண்யம் – 614 810

3) செயற்பொறியாளர்/நாகபட்டிணம்,
நாகபட்டிணம் மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
1/1795, முதல் மாடி செகண்ட் லேன் பீச் ரோடு,
நாகபட்டிணம் – 611 001. ... எதிர்மனுதாரர்கள்
(திரு.V. அண்ணாதுரை, உதவி செயற்பொறியாளர்/வேதாரண்யம்)

**கேட்புரை நாள் : 4–10–2018**

**ஆணை நாள் : 31–12–2018**

திரு. J. துரைராஜ், த/பெ ஜெகநாதன் நாயுடு, துளசியாப்பட்டிணம் அஞ்சல், வேதாரண்யம் தாலுக்கா, நாகப்பட்டிணம் மாவட்டம் அவர்களின் 23.06.2018 நாளிட்ட மனு

மேல் முறையீட்டு மனு எண்.31/2018 ஆக பதிவு செய்யப்பட்டது. மேற்கண்ட மேல்முறையீட்டு மனுவின் மீது மின்குறைத்தீர்ப்பாளரின் கேட்புரை 4–10–2018 அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

1. **<u>மேல்முறையீட்டாளரின் வேண்டுகோள்</u> :**

மேல்முறையீட்டாளரின் மின்இணைப்பு எண்.51100665–ன் நிலுவைத் தொகை ரூ.42905/–ஐ தள்ளுபடி செய்யவேண்டுமென மின்குறைதீர்ப்பாளரிடம் முறையீடு செய்துள்ளார்.

2. **<u>வழக்கின் சுருக்கம்</u> :**

2.1 மேல்முறையீட்டாளரின் மின் இணைப்பு எண்.511–006–65க்கு 11/2014 முதல் 9/2016 வரை மீட்டர் பழுதான காலத்திற்கு ரூபாய் 42,905/– நிலுவைத்தொகை செலுத்தவேண்டும் என இளமின் பொறியாளர்/இ–ப/துணை மின் நிலையம், வாய்மேடு அவர்களால் 06.02.2014 நாளிட்ட அறிவிப்பு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

2.2 06.02.2014 நாளிட்ட கடிதத்தில் தெரிவித்துள்ள நிலுவைத்தொகை கணக்கீடு தவறானதென்றும், தான் கட்டணம் பாக்கியின்றி செலுத்திவருவதாலும், மீட்டர் பழுதான விவரம் தனக்கு தெரியாதெனவும் தெரிவித்து மேல்முறையீட்டாளர் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தில் 19.04.2018ல் முறையீடு செய்துள்ளார். மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், நாகபட்டிணம் மின் பகிர்மான வட்டம் 11.05.2018 அன்று தனது ஆணையை பிறப்பித்துள்ளது. மன்றத்தின் தீர்வில் அதிருப்தியுற்ற மனுதாரர் மின்குறைதீர்ப்பாளரிடம் மேல்முறையீடு செய்துள்ளார்.

3. **<u>மன்றத்தின் தீர்வு</u>**

3.1 நாகபட்டிணம் மின் பகிர்மான வட்டத்தின் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை 11.5.2018 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது. அந்த ஆணையின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

“ <u>குறைதீர் மன்றத்தின் தீர்ப்புரை</u>

மனுதாரரின் கோரிக்கை மற்றும் எதிர்மனுதாரரின் பதிலுரை ஆகியவை குறைதீர் மன்றத்தில் பரிசீலிக்கப்பட்டது.

திரு. ஜெ. துரைராஜ், த/பெ ஜெகநாதன் நாயுடு, துளசியாப்பட்டிணம், வேதாரண்யம் அவர்கள் நேர்முக விசாரணையில் கலந்து கொள்ளவில்லை.

செயற்பொறியாளர்/நாகப்பட்டிணம் (பொ) மற்றும் உதவி செயற்பொறியாளர்/இபா/வேதாரண்யம் அவர்கள் நேர்முக விசாரணையில் கலந்து கொண்டு வாய்மேடு பிரிவு, துளசியாப்பட்டிணம் பகிர்மான தொழிலக மின் இணைப்பு எண்.511–006–65ல் மதிப்பீட்டு அலுவலர்/மேற்பார்வை பொறியாளர் அலுவலகம்/நாகப்பட்டிணம் அவர்களின் 17.1.2018 தேதியிட்ட ஆய்வறிக்கையின்படி மின் அளவி பழுதான காலமாக 11/2014 முதல் 6/2016 வரை திருத்தம் செய்யப்பட்ட சராசரி நிலுவைத்தொகை ரூ.42905/– (ரூபாய் நாற்பத்திரெண்டாயிரத்து தொள்ளாயிரத்து ஐந்து மட்டும்) மேற்கண்ட நுகர்வோருக்கு தகவல் தெரிவித்து நிலுவைத்தொகையினை வசூல் செய்ய தெரிவிக்கப்பட்டிருந்தது. அதன் அடிப்படையில் 6.2.2018ல் நுகர்வோருக்கு அளித்த கடிதத்தில் நிலுவைத்தொகையினை செலுத்த தெரிவிக்கப்பட்டுள்ளது. மனுதாரர் மேற்கண்ட நிலுவைத்தொகையினை செலுத்த தவறியதால் 4.4.2018 அன்று Slip மூலம் கணினியில் பதிவு செய்யப்பட்டுள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.

மேலும், 9/2016ல் புதிய மின் அளவி மாற்றப்பட்டு அதன்பின் உள்ள பயனீட்டு அளவின் அடிப்படையிலேயே கடந்த 11/2014 முதல் 6/2016 வரையுள்ள நிலுவைத் தொகை கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. எனவே, தெரிவிக்கப்பட்ட நிலுவைத்தொகை சரியானது என உதவி செயற்பொறியாளர்/இபரா/வேதாரண்யம் அவர்களால் தெரிவிக்கப்பட்டது.

மின்நுகர்வோர் குறைதீர் மன்றத்தின் கூட்டத்தில் மனுதாரர் கலந்து கொள்ளாத நிலையில் மனுதாரரது கோரிக்கையின்படி மின் இணைப்புக்கான consumer ledger ஆய்வு செய்யப்பட்டது. அதில் மின்மானி பழுதடைந்த காலமாக 11/2014 முதல் 6/2016 வரை சராசரியாக 60 யூனிட்டுகள் மட்டுமே பயனீட்டு அளவாக பதிவு செய்யப்பட்டுள்ளது. புதிய மின்மானி 9/2016ல் பொருத்தப்பட்டவுடன் பயனீட்டு அளவானது சராசரியாக 600 யூனிட்டுக்கு மேல் கணினியில் பதிவாகியுள்ளது.

*எனவே, மதிப்பீட்டு அலுவலர் அவர்களது ஆய்வறிக்கையின்படி* ***11/2014*** *முதல்* ***6/2016*** *வரை மின் பயனீட்டு தொகை மறு கணக்கீடு செய்யப்பட்டது சரியானது எனவும், நிலுவைத்தொகையினை மனுதாரர் செலுத்த வேண்டும் எனவும் இக்குறைதீர் மன்றத்தில் தீர்ப்பளிக்கப்படுகிறது.''*

**4. <u>மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள்</u> :**

**4.1** எனது மின்இணைப்பு எண்.**511–006–65** க்கு நிலுவைத்தொகை ரூ.**42,905/–** என இளமின் பொறியாளர் அவர்களால் அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளது. அதிலுள்ள கணக்கீடு தவறானது, அது மட்டுமில்லாமல் நான் கட்டணம் பாக்கியின்றி செலுத்தி வருகிறேன். **11/2014** முதல் **9/2016** வரை உள்ள காலத்தில் மின் மீட்டர் பழுதான விவரம் எனக்கு தெரியாது. நான் படிப்பறிவில்லாதவன், மிகவும் ஏழ்மையான குடும்பத்தை சேர்ந்தவன், அதுமட்டுமல்லாமல், என் வீட்டில் எனது மூன்று குழந்தைகள் இளம்பிள்ளை வாதத்தால் பாதிக்கப்பட்டு படுத்த படுக்கையாக உள்ளனர்.

**4.2** மேற்படி அந்த மூன்று பிள்ளைகளை கவனிக்க இயலாமல் கஷ்ட ஜுவனம் செய்து வரும் நிலையில் இந்த தொகையை செலுத்த வேண்டுமென கேட்டவுடன் அதிர்ச்சி அடைந்து மன உளைச்சலுக்கு உள்ளாகி நோய்வாய்ப்பட்டுள்ளேன். நான் இதயநோயாளி ஆவேன். இது சம்பந்தமாக தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், மின் நுகர்வோர் குறைதீர் மன்றத்தில் முறையீடு செய்தேன்.

**4.3** என்னுடைய முறையீட்டுக்கு என்னுடைய குறையினை சரியாக குறைதீர் மன்றத்தில் சொல்ல எனக்கு உடல்நிலை சரியில்லாத காலத்தால் கலந்துகொள்ள முடியவில்லை. ஆனால், விசாரணை அதிகாரி எனக்கு மறுமுறை வாய்ப்பளிக்காமல், செயற்பொறியாளர்/நாகப்பட்டிணம், உதவி செயற்பொறியாளர் வேதாரண்யம் மதிப்பீட்டு அலுவலர் ஆகியோரின் அறிக்கையை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு எனது குறைகளை ஏற்காமல் ஒரு தலைப்பட்சமாக தீர்ப்புரை வழங்கப்பட்டுள்ளது. எனவே, மின் மீட்டர் பழுதான காலத்தில் தவறான கணக்கிடு செய்து தொகையினை செலுத்த வேண்டுமென்று சொல்வது ஏற்புடையதல்ல.

4.4 எனவே, கருணை அடிப்படையில் மின் குறைதீர்ப்பாளர் ஆகிய நீங்கள் என்னுடைய இக்குறையினை ஏற்று நல்ல தீர்ப்பை வழஙகிட வேண்டுமாய் பணிவுடன் வேண்டுகிறேன்.

## 5. <u>எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதஙகள்</u> :

5.1 திரு. J. துரைராஜ் அவர்களின் மின் இணைப்பு எண்.511–006–65ற்கு மின் அளவி பழுதான காரணத்தால் புதிய மின்மானி 9.9.2016 அன்று மாற்றம் செய்யப்பட்டுள்ளது. புதிய மின்அளவி மாற்றம் செய்த பின் மின்பயனீட்டு அளவு முந்தைய காலத்தைவிட அதிகமாக இருப்பது ஆய்வில் கண்டறியப்பட்டு மின் அளவி பழுதான காலமான 11/2014 முதல் 9/2016 வரையிலான திருத்தம் செய்யப்பட்ட பயனீட்டு அளவானது மின் அளவி பொருத்தியப் பின் சராசரி 600 யூனிட்டுகள் என கணக்கிடப்பட்டு மேற்கண்ட காலத்திற்கு சராசரி நிலுவைத்தொகை ரூ.42905/– தொகையை செலுத்த நுகர்வோருக்கு இளமின் பொறியாளர்/வாய்மேடு பிரிவு அலுவலகம் வாயிலாக 6.2.2018 அன்று கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டது.

5.2 அதன்பின் நாகை மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தில் முறையீட்டு நுகர்வோர் நேர்முக விசாரணையில் கலந்துகொள்ளவில்லை. எனினும் மேற்கண்ட மின் இணைப்பு மின் அளவி பழுதான காலஙகளில் மின்பயனீட்டு அளவை மின் இணைப்புக்கான consumer ledger ஆய்வு செய்யப்பட்டது. அதில் மின்மானி பழுதடைந்த மேற்கண்ட காாலஙகளில் சராசரி 60 யூனிட்டுகள் பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆனால், 9/9/2016க்கு பின் மின்பயனீட்டு அளவானது சராசரி 600 யூனிட்டுக்கு மேல் பதிவாகியுள்ளது. எனவே, மேற்கண்ட காலத்திற்கான கணக்கிடப்பட்ட சராசரி நிலுவைத்தொகை ரூ.42905/– சரியானது.

## <u>6. மேல்முறையீட்டாளரின் எழுத்துப்பூர்வமான வாதுரை</u>

6.1 மின் இணைப்பு எண்.51100665 நிலுவைத்தொகை ரூ.42,905/– செலுத்த வேண்டும் என்று இளமின் பொறியாளர் அவர்களால் அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளது. அதிலுள்ள கணக்கீடு தவறானது. அது மட்டுமல்லாமல் எனது கட்சிகாரர் கட்டண பாக்கியின்றி மின்கட்டண தொகை செலுத்தி வந்துள்ளார். 11/2014 முதல் 9/2016 வரை உள்ள காலத்தில் மின் மீட்டர் பழுதான விபரம் எனது கட்சிக்காரருக்கு தெரியாது.

**6.2** மின் மீட்டர் பழுதான காலத்தில் தவறான கணக்கீடு செய்து தொகையினை செலுத்த வேண்டுமென்று சொல்வது ஏற்புடையதல்ல. மின் மீட்டர் பழுதான விபரம் படிப்பறிவு இல்லாத எனது கட்சிக்காரருக்கு தெரியாது. எனவே, கணக்கீடு அலுவலரால் செய்யப்பட்ட கணக்கீடு ஏற்புடையதல்ல. எனது கட்சிக்காரர் தொழிலும் நலிவடைந்து தொழிலை மேற்கொண்டு நடத்த முடியாத சூழ்நிலையில் இந்த தொகையை செலுத்த வேண்டுமென்பது வேதனையாகவும் மனஉளைச்சலுக்கு உள்ளானதாகவும் எனது கட்சிக்காரர் தெரிவிக்கின்றார்.

**6.3** இந்த வழக்கில் மனுதாரர் என்னுடைய கட்சிக்காரர் புதிய மின் மீட்டர் **9/2016** முதல் பொருத்தப்பட்டு கணக்கிடவும் **600** யூனிட்டுக்கு மேல் பதிவு செய்துள்ள விபரம் தவறானதாகும். இந்த காலத்தில் எனது கட்சிக்காரர் மின் இணைப்பு பலனை முழுவதும் பயன்படுத்தவில்லை. மேலும், மதிப்பீட்டு அலுவலர் ஆய்வறிக்கை **11/2014** முதல் **6/2016** வரை மறு கணக்கீடு செய்யப்பட்டது என்பது ஏற்கதக்கதல்ல.

**7. <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை</u> :**

**7.1** மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை நேரில் எடுத்துரைப்பதற்கு வசதியாக **04.10.2018** அன்று மின்குறைதீர்ப்பாளர் முன்பு கேட்புரை நடப்பட்டது.

**7.2** மேல்முறையீட்டாளர் திரு. J. துரைராஜ், அவர்களின் சார்பாக திரு. V. சீனிவாசன், வழக்கறிஞர் அவர்கள் கலந்து கொண்டு மேல்முறையீட்டாளர் தரப்பு வாதங்களை நேரில் எடுத்துரைத்தார்.

**7.3** எதிர்மனுதாரர் சார்பில் திரு. V. அண்ணாதுரை, உதவி செயற்பொறியாளர்/ வேதாரண்யம் அவர்கள் கலந்து கொண்டு தன்னுடைய தரப்பு வாதங்களை நேரில் எடுத்துரைத்தார்.

**8. <u>மேல்முறையீட்டாளர் கேட்புரை நாளில் எடுத்துரைத்த வாதங்கள்</u> :**

**8.1** மேல்முறையீட்டாளர் சார்பாக கலந்து கொண்ட திரு. V. சீனிவாசன், வழக்கறிஞர் அவர்கள் மேல்முறையீட்டு மனுவிலுள்ள வாதங்களையே மீண்டும் வலியுறுத்தினார்.

8.2 மின் மீட்டர் பழுதான விவரம் படிப்பறிவு இல்லாத மேல்முறையீட்டாளருக்கு தெரியாதெனவும் மின் மீட்டர் பழுதான காலத்தில் தவறான கணக்கீடு செய்து மின் கட்டண தொகையினை செலுத்த வேண்டுமென்று சொல்வது ஏற்புடையதல்ல என்றும், 11/2014 முதல் 9/2016 வரை மீட்டர் பழுதானதாக கூறப்படும் காலத்தில் மேல்முறையீட்டாளர் தனது மின்இணைப்பு பலனை முழுவதும் பயன்படுத்தவில்லை எனவும் தெரிவித்து நியாயமான தீர்ப்பு வழஙக வேண்டுமென தெரிவித்தார்.

9. <u>எதிர்மனுதாரர் கேட்பரை நாளில் எடுத்துரைத்த வாதஙகள்</u>

9.1 எதிர்மனுதாரர் சார்பில் கலந்துகொண்ட திரு. V. அண்ணாதுரை, உதவி செயற்பொறியாளர் / வேதாரண்யம் அவர்கள் எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதஙகளையே மீண்டும் வலியுறுத்தினார்.

9.2 மேல்முறையீட்டாளரின் மின்இணைப்பு எண்.511–006–65–ன் மின்னளவி பழுதானதால் 09.09.2016 அன்று புதிய மின்னளவி பொருத்தியபின் மின் பயனிட்டளவு முந்தைய காலத்தைவிட அதிகமாக இருந்ததால் மின்னளவி பழுதான காலம் 11/2014 முதல் 09/2016 வரை நிலுவைத்தொகை ரூ.42,905/– வசூலிக்கப்பட்டது. புதிய மின்னளவி 09.09.2016–ல் பொருத்திய பின் மின் பயனீட்டளவு சராசரியாக 600 யூனிட்டுகள் பதிவாகியுள்ளதாலும் 09.09.2016–க்கு முந்தைய மின்னளவி பழுதான காலத்தில் 11/2014 முதல் 09/2016 வரையிலான காலஙகளில் சராசரியாக 60 யூனிட்டுகள் மட்டுமே பதிவாகியுள்ளதால் நிலுவைத்தொகை கணக்கீடு செய்தது சரியே என வாதிட்டார்.

10. <u>மின்குறைதீர்ப்பாளரின் தீர்வு</u>

10.1 இருதரப்பு வாதஙகளையும் ஆராய்ந்து கீழ்கண்டவாறு தீர்வு செய்யப்படுகிறது.

10.2 எதிர்மனுதாரர் மின்இணைப்பு எண்.511–006–65–ல் புதிய மின்னளவி 09.09.2016 அன்று பொருத்திய பிறகு சராசரி பயனீட்டளவு 600 யூனிட்டுகள் இருந்ததாகவும், மின்னளவி பழுதான 11/2014 முதல் 09/2016 வரையிலான காலத்தில் நுகர்வோரின் மின் பயனீட்டளவு 60 யூனிட்டுகள் மட்டுமே இருந்ததால் 09.09.2016–க்கு முந்தைய இரண்டு வருடகாலத்திற்கு சராசரி 600 யூனிட்டுகள் பயனீட்டளவாகக் கொண்டு நிலுவைத்தொகை ரூ.42,905/– கணக்கீடு செய்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

**10.3 09.09.2016** அன்று மின்னளவி பழுது என புதிய மின்னளவி மாற்றப்பட்டுள்ளது. புதிய மின்னளவி **09.09.2016** அன்று பொருத்திய பின் சுமார் **2** வருடஙகள் கழித்து மதிப்பீட்டு அலுவலரால் **11/2014** முதல் **09/2016** வரையிலான காலத்திற்கு நிலுவைத்தொகை கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. **11/2014** முதல் இரண்டு வருட காலத்திற்கு நிலுவைத்தொகை கணக்கீடு செய்வதற்கு தகுந்த காரணம் ஏதும் குறிப்பிடப்படவில்லை. **11/2014 –**லிருந்து மின்னளவி குறைபாடு என்பதற்குரிய ஆதாரம் எதுவும் சமர்ப்பிக்கப்படவில்லை.

**10.4 09.09.2016 –**க்கு முன்னர் மின்னளவி பழுதான **11/2014** முதல் **09/2016** வரையிலான காலஙகளில் இரண்டு வருடஙகள் மின் பயனீட்டளவு கணக்கு எடுத்துள்ள அனைத்து காலஙகளிலும் மின்னளவியின் (Status) நிலைப்பாடானது normal என்றே மின் நுகர்வோர் பதிவேட்டில் (Consumer Ledger) பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆனால், **09.09.2016** அன்று மின்னளவி பழுது என முடிவு செய்யப்பட்டதற்குச் சான்றாக மின்னளவி ஆய்வு செய்யப்பட்டதற்கான அறிக்கை எதிர்மனுதாரரால் சமர்ப்பிக்கப்படவில்லை. எதிர்மனுதாரும் பழைய மின்னளவி பரிசோதனை செய்யப்படவில்லையெனவும் CMRI DATA பதிவிறக்கம் செய்யப்படவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

**10.5 03.09.2016** அன்று மின்னளவி பழுது என்று மின்நுகர்வோர் பதிவேட்டில் குறிப்பிட்டிருந்தாலும்கூட **09.09.2016** அன்றுதான் மின்னளவி மாற்றப்பட்டுள்ளது. **03.09.2016** அன்று மின்னளவியில் பழுது ஏற்பட்டதால்தான் **09.09.2016** அன்று மின்னளவி மாற்றப்பட்டுள்ளது என்று நிரூபணமாகாத நேர்வில், **03.09.2016–**ற்கு முந்தைய இரண்டு வருடஙகளும் மின்னளவி பழுது என்று எவ்வாறு எதிர்மனுதாரர்கள் முடிவு செய்தார்கள் என்பது கேள்விக்குறியதாக உள்ளது. மின்னளவி பழுது என்று வாதிடும் எதிர்மனுதாரர்தான் மின்னளவியில் ஏற்பட்டுள்ள பழுதையும் மற்றும் பழுதிற்கான காலஅளவையும் நிரூபிக்க கடமை பட்டவர் ஆவார். அவ்வாறு மின்னளவியின் பழுதை நிரூபிக்காத நேர்வில் மேல்முறையீட்டாளரிடம் நிலுவைத்தொகை செலுத்தக்கோருவது இயற்கை நீதியின்படி ஏற்புடையதல்ல என்று கருதுவதால் மேல்முறையீட்டாளரிடம் செலுத்தக்கோரிய நிலுவைத்தொகையை தள்ளுபடி செய்து தீர்வு செய்யப்படுகிறது.

**11. <u>கவனிப்பாய்வு</u>**

**11.1** மின்இணைப்பு எண்.**511–006–65**–ன் மின்னளவி **09.09.2016** அன்று பழுது என மாற்றப்பட்டு சுமார் **2** வருடங்கள் கழித்து **17.11.2018** அன்றுதான் மதிப்பீட்டு அலுவலரால் நிலுவைத்தொகை கணக்கிடப்பட்டுள்ளது. புதிய மீட்டர் பொருத்திய பின் மின் பயனீட்டளவு அதிகமாக இருக்கும்போது மின்னளவியை சோதனைக்குட்படுத்தியும், CMRI data download செய்தும் மின்னளவியின் பழுதை உறுதி செய்திருந்தால் மின்னளவி பழுதான நாளை சரியாக தீர்மானத்திருக்க முடியும். **11/2014** லிருந்து **09.09.2016** வரை **(2** வருடம்**)** நிலுவைத்தொகை மதிப்பீட்டு அலுவலரால் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆனால், **11/2014**–க்கு முந்தைய காலங்களிலும் அதாவது **09/2013**லிருந்தே மின் பயனீட்டளவு சராசரியாக **60** யூனிட்டுகள்தான் நுகர்வோர் பதிவேட்டில் பதிவாகியுள்ளது. சுமார் **3** வருடம் கழித்து ஆய்வு செய்யும் மதிப்பீட்டு அலுவலரால் மின்னளவி பழுதான காலத்திற்கு நிலுவைத்தொகை கணக்கீடு செய்யும்பொழுது மாதந்தோரும் மின்பயனீட்டளவு எடுக்கும் கணக்கீட்டாளர், வருவாய் மேற்பார்வையாளர் மற்றும் பொறுப்பில் உள்ள அலுவலர்கள் ஆகியோர் விதிமுறைகளின்படி கடமையாற்ற தவறியதன்பால் உரிமதாரரின் கவனம் ஈர்க்கப்படுகிறது.

**12. <u>முடிவுரை</u>**

**12.1** பத்தி எண்.**10**–ல் உள்ள தீர்வின்படி எதிர்மனுதாரர்கள் மின்னளவியின் பழுதை நிரூபிக்காத நேர்வில் மேல்முறையீட்டாளரிடம் நிலுவைத்தொகை செலுத்தக்கோருவது இயற்கை நீதியின்படி ஏற்புடையதல்ல என்று கருதுவதால் மேல்முறையீட்டாளரிடம் செலுத்தக்கோரிய நிலுவைத்தொகையை தள்ளுபடி செய்து தீர்வு செய்யப்படுகிறது.

**12.2** மேற்கண்ட தீர்வுடன் மேல்முறையீட்டு மனு எண்.**31/2018** முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(செ. தேவராஜன்)**
மின்குறைத் தீர்ப்பாளர்

<u>பெறுநர்</u>
**1)** திரு. J. துரைராஜ்,
த/பெ ஜெகநாதன் நாயுடு,
துளசியாப்பட்டிணம் அஞ்சல்,
வேதாரண்யம் தாலுக்கா, நாகப்பட்டிணம் மாவட்டம்

2) உதவி பொறியாளர்/வாய்மேடு,
நாகபட்டிணம் மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
பட்டுக்கோட்டை மெயின் ரோடு,
வாய்மேடு – 614 714.

3) உதவி செயற்பொறியாளர்/வேதாரண்யம்,
நாகபட்டிணம் மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
திருத்துறைபூண்டி மெயின் ரோடு,
வேதாரண்யம் – 614 810

4) செயற்பொறியாளர்/நாகபட்டிணம்,
நாகபட்டிணம் மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
1/1795, முதல் மாடி செகண்ட் லேன் பீச் ரோடு,
நாகபட்டிணம் – 611 001.

5) தலைவர்
(மேற்பார்வைப் பொறியாளர்)
தமிழ்நாடு மின் நுகர்வோர் குறை தீர்க்கும் மன்றம்
சாட்டையப்பர் கிழக்கு தெரு,
நாகபட்டிணம் – 611 001.

6) தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை
சென்னை – 600 002.

7) செயலாளர்
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை
சென்னை – 600 008.

8) உதவி இயக்குநர் (கணிணி) – <u>மின்குறைதீர்ப்பாளரின் இணையதளத்தில் வெளியிடுவதற்காக</u>
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை
சென்னை – 600 008.